திரு. மு. அப்பாவு

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. து. அமரமூர்த்தி

டாக்டர் க. நெடுஞ்செழியன்

திருமதி ரா. லீமா றோஸ்

திரு. சு. குணசேகரன்

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010–2011 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதி நிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் பேசி முடித்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள்.*

முற்பகல் 11–15

திரு. செ.ம. வேலுசாமி, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரண்டுபேரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்பச் சொல்கிறேன், அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அத்தனையும் பரிசீலனையில் இருக்கின்றன. அவற்றை நான் பரிசீலனை செய்து எதை எதை எடுக்க வேண்டுமோ அதை எடுப்பேன். நீங்கள் சொல்வதையெல்லாம் எடுக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் இருவரும் நிற்கிறீர்கள். யாராவது ஒருவர் மட்டும் சொல்லுங்கள். மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள். உங்கள் குறை என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்ன சொல்லுங்கள்?

2010 நவம்பர் 9]

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கேள்வி நேரம் முடிந்தவுடன் அவையில் இருக்கின்ற உறுப்பினர்கள், அன்றையதினம் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்ற மரபு இருக்கிறது. அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று சபைத் தலைவர் கேட்டு அனுமதி கொடுப்பதும், அனுமதி மறுப்பதும் உங்களுடைய உரிமை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. நீங்கள் முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் எப்போது முடிக்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இது நன்றாக இல்லை. இது ரொம்ப over.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எது நல்லது, எது நல்லது இல்லையென்பது எனக்குத் தெரியும். விஷயத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நாங்கள் விஷயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே என்னவென்று கேட்காமல் நீங்கள் மறுக்கிறீர்கள். Zero hour-ல் உறுப்பினர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்று கேட்காமலே மறுப்பது நீதி இல்லை; நியாயம் இல்லை; தர்மம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.பி.எஸ். நீங்கள் முதல்வராக இருந்தவர். விதி என்று ஒன்று இருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ளுங்கள் (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். விதிகளில் இந்த அவை எப்படி நடக்க வேண்டுமென்று இருக்கிறது. காலையில் உங்களுடைய கொறடா திரு. செங்கோட்டையன் வந்து என்னைப் பார்த்தார். என்னென்ன issues என்று கேட்டார். நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னேன். நான் இதை, இதைக் கேட்கப்போகிறேன் என்று அப்போதே அவர் சொல்லியிருக்கலாம். உங்கள் கட்சி சார்பாக எதுவுமே அவர் சொல்லவில்லை. அதற்குப் பிறகு இப்போது நினைத்ததையெல்லாம் பேசுவீர்கள், அதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) அப்படி அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. பேரவைத் தலைவருக்கு அறிவிப்பு கொடுக்காமல் எந்த issue–வும் raise பண்ணக்கூடாது. (குறுக்கீடுகள்) என்னிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டு, இந்த issue–ஐ நான் கேட்கப்போகிறேன் என்று சொன்னால் அது சரி. (குறுக்கீடு) அது முடியாது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: Zero hour-ல் பேசலாமா, பேசக்கூடாதா என்று நீங்கள் முதலில் முடிவு செய்யுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு என்ன grievance? (குறுக்கீடு) உங்கள் விளக்கம் போதும். என்ன grievance? அதைமாத்திரம் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: உறுப்பினர் கேள்வி எழுப்புவதற்கு, பிரச்சினைகளை எழுப்புவதற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா? அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். Zero hour-ல் உறுப்பினர் கேள்வி எழுப்புவதற்கு, பிரச்சினைகளை எழுப்புவதற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை இருக்கிறது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: பிறகு ஏன் நீங்கள் அனுமதி மறுக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் வந்து சொல்லிவிட்டுத்தான் அந்தப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டும். (குறுக்கீடு) என்னிடம் சொல்லிவிட்டுத்தான் பிரச்சினையைக் கிளப்ப வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்கள் கேட்கிறார், Zero hour-ல் ஓர் உறுப்பினர் எழுந்து ஒரு பிரச்சினையைக் கிளப்புவதற்கு உரிமை உண்டா, இல்லையா என்கிறார். நான் திருப்பிக் கேட்கிறேன். யார் எந்தப் பிரச்சினையை எழுப்பினாலும், இன்னார்தான் பேச வேண்டுமென்று ஆணையிடுகிற அதிகாரம் உங்களுக்கு உண்டா, இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் permission கொடுக்கவில்லையென்றால் அவர்கள் கேட்க முடியாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உட்காருங்கள். நீங்கள் என்ன பிரச்சினையைக் கிளப்பப் போகிறீர்கள் என்று என்னிடம் வந்து சொல்லி இருக்கலாம். சம்பந்தம் இல்லாத subject–ஐ நீங்கள் பேசினால், அதை நான் allow பண்ணிக்கொண்டு இருக்க முடியுமா? அது எப்படி? (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தச் சபைக்குத் தொடர்பு இல்லாததையோ, இந்தத் தமிழ்நாட்டிற்குத் தொடர்பு

2010 நவம்பர் 9] [பேரவைத் தலைவர்]

இல்லாததையோ நீங்கள் பேசினால் நான் எப்படி allow பண்ண முடியும்?

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பன்னீர்செல்வம் அவர்கள் சொல்லட்டும். பொதுவாக, முன்னதாகவே சபாநாயகர் அறைக்குப் போய் இன்றைக்கு இந்தப் பிரச்சினை எழுப்பப் போகிறோம் என்று கேட்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிக் கேட்பதில் என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அவர் என்ன சொல்வார். . . (குறுக்கீடு) இல்லை, இல்லை. மரபு அதுதான். பேரவைத் தலைவர் என்ன சொல்வார்? இன்றைக்கு எடுத்துக்கொள்ளலாம் அல்லது நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் அல்லது அமைச்சர் தயாராக இருக்கிறாரா என்று கேட்டுச் சொல்வார். ஆனால், இன்றைக்கு அந்த முறையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் போய் பேரவைத் தலைவரைப் பார்த்திருக்கிறார். அவர் வந்து சென்ற பிறகு, நான் சபாநாயகரிடம் இன்றைக்கு ஏதாவது பிரச்சினை எழுப்பியிருக்கிறார்களா என்று கேட்டேன். ஒன்றும் இல்லை, பிரச்சினையே இல்லை, திரு. செங்கோட்டையன் அவர்களும் வந்து போய்விட்டார் என்று பேரவைத் தலைவர் கூறினார். சரி, புயல், மழை நின்று போய்விட்டது என்று நான் பேசாமல் இருந்துவிட்டேன். ஆனால், இப்போது மீண்டும் கிளப்புகிறீர்களே, எப்படி நாங்கள் பதிலளிக்க முடியும்? (குறுக்கீடுகள்)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் கேட்பது, கேள்வி நேரம் முடிந்தவுடன் Zero Hour–ல் அன்றாடம் ஏற்படுகின்ற முக்கிய பிரச்சினைகள் குறித்து சபை உறுப்பினர்கள் எழுப்புவதற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா? அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். வேறு எதற்கும் இப்போது பதில் சொல்லாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய பதில் இருக்கட்டும். உங்களுக்கு இப்போது என்ன பிரச்சினை?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அப்படிக் கேளுங்கள்.

[2010 நவம்பர் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் காலையிலே என்னுடைய அறைக்கு வருகிறீர்கள். இந்த, இந்த important issues இருக்கின்றன என்று சொல்லுங்கள். இந்த அவைக்கு வந்த பிறகுதான் உங்களுக்கு இந்த issue வந்திருக்கிறதா? (குறுக்கீடு) பின்பு என்ன? காலையில் உங்கள் சட்டமன்ற உறுப்பினர் என்னை வந்து பார்க்கிறார். இதுகுறித்துக் கேட்கப் போகிறோம் என்று என்னிடம் சொல்லலாம் அல்லவா? (குறுக்கீடு) அவைக்கு என்று ஒரு rule எதற்கு இருக்கிறது? (குறுக்கீடு) அவைக்கு என்று ஒரு rule எதற்கு இருக்கிறது? (குறுக்கீடு)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இடையிலே அவருக்கு எதற்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் நன்றி சொன்னார்கள். நன்றி சொல்வதில் ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன் கேளுங்கள். திரு. செங்கோட்டையன், (குறுக்கீடு) எனக்கு உரிமை இருக்கிறது. அதை நீங்கள் ஒன்றும் கேட்க முடியாது. அதை எப்படி allow செய்தீர்கள் என்று கேட்பதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்) எனக்கு உரிமை இருக்கிறது. அவரை ஏன் allow செய்தீர்கள் என்று கேட்பதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது. உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வது, நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள், அது ஆய்விலே இருக்கிறது. அதை நான் பரிசீலனை செய்து எடுப்பேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் சொல்கிறேன். ஆரம்பத்திலிருந்தே நான் அதைத்தான் சொல்கிறேன். முதலில் Zero Hour–ல் எடுக்கும்போது நான் என்ன சொன்னேன்? நீங்கள் கொடுத்தது அனைத்தும் ஆய்வில் இருக்கின்றன, அவற்றை ஆய்வு செய்து எதை, எதை எடுக்கமுடியுமோ அவற்றை எடுக்கிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறேன். நீங்கள் அதற்குப் பிறகும் முரண்டு பிடித்தீர்கள் என்றால் நான் என்ன செய்வது, உட்காருங்கள்.

2010 நவம்பர் 9] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய பிரச்சினை குறித்து இந்த அவையின் சார்பாக எடுக்க வேண்டிய ஒரு முடிவை நான் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தங்களிடத்திலே ஏற்கெனவே கொடுக்கப்பட்ட பிரச்சினை குறித்து எழுப்புவதாக இருந்தால் அதை உங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் எழுப்ப வேண்டும். ஒருவேளை தங்களிடத்தில் கொடுக்காத ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டிய ஒரு அவசியம் வந்தால் Zero Hour என்ற பெயரில் அதை எழுப்பலாம். எழுப்பியதற்குப் பின்னர், அதில் பேசுவதற்கு அனுமதிப்பதா, அல்லவா என்பதைத் தாங்கள் தீர்மானிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் கேட்கின்றேன். பிரச்சினைகளின் முக்கியத்துவம் கருதி, (குறுக்கீடு) முதலில் நான் பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் திரும்பச் சொல்கிறேன். நாங்கள் எழுந்து நின்றாலே, நீங்கள் எங்களை 'உட்காருங்கள், உட்காருங்கள்' என்று சொல்லி பள்ளிக்கூட தலைமை ஆசிரியர் போன்று பேசுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. பன்னீர்செல்வம், நீங்கள் ஒருவர் எழுந்து நின்றால் பரவாயில்லை. உங்கள் பின்னாலே அவ்வளவு பேரும் ஒரே நேரத்தில் எழுந்து நின்றால் நான் என்ன சொல்வது? (குறுக்கீடு) அத்தனை பேரும் ஒரே நேரத்தில் எழுந்து நிற்கிறீர்கள் அல்லவா? (குறுக்கீடு)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: நீங்கள் allow செய்யவில்லை. அதனால்தான் நாங்கள் அனைவரும் எழுந்து நிற்க வேண்டியிருக்கிறது.

[2010 நவம்பர் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்த அறிவிப்புகள் அனைத்தும் பரிசீலனையில் இருக்கின்றன. நான் பரிசீலனை செய்து, எடுக்கக்கூடியவற்றை எடுப்பேன். இதைத்தான் எடுக்கவேண்டும், இதை எடுக்கக்கூடாது என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது. (குறுக்கீடு)

முற்பகல் 11–25

6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2010–2011, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010–2011 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010–2011 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை@ இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் ரூபாய் 3,607 கோடியே 27 இலட்சம் நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றது. இதில் ரூபாய் 2,168 கோடியே 58 இலட்சம் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 1,438 கோடியே 69 இலட்சம் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2010–2011 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் சட்டமன்றப் பேரவையில் 2010 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் நாளன்று தாக்கல் செய்யப்பட்ட பின்னர், 'புதுப் பணிகள்' மற்றும் 'புதுத் துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும்தான் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கமாகும். தமிழக மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே இத்தகைய சில புதிய செலவுப் பொறுப்புகள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டன.

@ 80 முதல் 84 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.